## தலைப்பு 263 – அம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்

---

### 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 மே 17 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச்

செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும் .

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட இலக்கம் 1 இன் குத்தகை வாடகை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்காக வரி செலவின விடயத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 592,181 ஆன வீதவரி மீளாய்வாண்டின் செலவினமொன்றாக நிதி செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | பட்டியலை சனவரி 31 இற்கு முன்னர் கொடுப்பனவு செய்தால் கழிவு பெறக்கூடியதாக இருப்பதால் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 1,119,500 நிதி ஏற்பாடு பெற்றுக் கொள்ளப்பட்டு 2021 ஆம் ஆண்டின் முழுப் பட்டியல் மற்றும் 2022 ஆம் ஆண்டின் பட்டியல்களில் ஒரு பகுதிக்காக கொடுப்பனவு செய்யப்பட்டது. | மீளாய்வாண்டிற்கான செலவினம் மாத்திரம் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் (சிகாஸ்) நிகழ்ச்சித்திட்டம்) ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 5,761,799,147 ஆக இருந்த போதும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தயாரிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 5,761,155,643 ஆக இருந்தமையால் நிதிக் கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 643,504 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தினால் 2021 திசெம்பர் மாதம் உபகர ணங்களுடன் சேர்க்கப்பட்ட பெறுமதியாகும். உபகரணங்களுக்கு சிகாஸ் முறைமையில் காணப்பட்ட செயற்பாடு காரணமாக இப்பெறுமதி இரண்டு தடவை எடுக்கப்பட்டது. | கணக்கீட்டு முறைமைக்கு சரியான தரவுகள் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல் கோவையின் ஏ.சீ.ஏ.06 படிவத்துடன் இணைத்துக் காண்பிக்க வேண்டிய புதிய CIGAS இணைய உள்ளீடு மூலம் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கைக்கு பதிலாக திறைசேரி அச்சீட்டு பதிவு SA 82 சமர்ப்பிக்கப்பட்டிருந்தது | அரச கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் 2021 நவம்பர் 26 ஆந் திகதிய 2021/03 ஆம் இலக்க சுற்றறிக்கை ஆலோசனைகளின் பிரகாரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளதாக | சிகாஸ் இணைய உள்ளீடு மூலம் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 7002-0-0-310-0-21-0 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் கட்டுநிதி பெறுவனவு மற்றும் கொடுப்பனவு ரூபா 4,820,762,447 ஆக இருந்த போதும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் ரூபா 4,903,492,447 ஆக இருந்தமையால் ரூபா 82,730,000 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | இது 2021 பெப்ரவரி மாதம் திறைசேரியால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல் களின் பெறுபேறொன்றாக இருப்பதாகவும் இதன் காரணமாக கணக்கு செயற்பாடுகளுக்கு எவ்வித தாக்கமொன்றும் ஏற்படுவதில்லையெனவும் | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்கள் சரியாக இணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | 10 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தன. | நிதிஏற்பாடுகளுக்கு உரியதாக செலவினம் உருவாகாமை கொரோனா தொற்று காரணமாக கருத்திற் கொள்ளக் கூடியளவு காலம் அலுவலகம் மூடப்பட்டிருந்தமை மற்றும் மந்தகெதியில் செயற்பாடுகள் இடம்பெற்றமை அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் செலவினங்கள் மீளாய்வு செய்யப்பட்டமை காரணங்களாக இருந்தன. | தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு செயற்பாடுகளுக்காக போதிய நிதி ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2 விடயங்களுக்காக வருடாந்த மதிப்பீட்டின் மூலம் போதியளவான நிதி ஏற்பாடு ஒதுக்கப்படா மையினால் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளில் 34 சதவீதம் மற்றும் 1493 என நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் நிதிஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு நிதிஏற்பாடு இல்லாமை, கிராம சேவையாளர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும் தொடர்பாடல் படி அங்கீகரிக்கப்பட்டமை | தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு செலவின விடயங்களுக்காக போதிய நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 03 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 522,500,000 ஆன நிதிஏற்பாடு ஏசீஏ2(III) படிவத்தின் மூலம் காரணங்களுடன் வெளிப்படுத்தப்படவில்லை. | வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதிஏற்பாடு வழங்கப் படாதிருந்த செலவின விடயங்கள் அல்லாமல் இருந்ததுடன் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட நிதிஏற்பாடாகும். | திருத்தங்களுக்கான காரணங்களுடன் வெளிப்படுத்தப்பட வேண்டும் |

## 2.3 பொறுப்புக்களுக்கு கடப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோணலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 94(1) இற்க இணங்காத வகையில் 02 செலவின விடயங்களுக்காக சேமிப்புக்களை மிகைத்து ரூபா 77,715 ஆன பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. | குறிப்பிடப்பட்டுள்ள பொறுப்புக்கள் கட்டாயமாக மாதாந்தம் செலவிடப்பட வேண்டிய செலவின மாகையால் 2021 ஆம் ஆண்டின் நிதிஏற்பாடு போதியதாக இல்லாமையாலும் கட்டுநிதி இல்லாமையாலும் அடுத்தாண்டு செலுத்த வேண்டிய பொறுப்பொன்றாகுமென | தேவைப்பாடுகளை கருத்திற்கொண்டு செலவின விடயங்களுக்காக போதிய நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களினால் பல்வேறு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூபா | கொவிட் தொற்று நோய் நிலையினால் சேமிப்பு ஏற்பட்டிருந்தது. | வழங்கப்பட்ட சகல நிதி ஏற்பாடுகளையும் வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் |

| | | | |
|---|---|---|---|
| | 4,479,634,787 தொகையான நிதி ஏற்பாடுகளில் மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுமொத்தமாக ரூபா 153,621,768 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 237 | சூரியவெவ பிரதேச செயலகத்தினால் தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்காக 1764 பொருட் பொதிக்காக ரூபா 17,595,000 கொடுப்பனவு செய்யும் போது அரசிற்கு பொருட்கள் பெற்றுக் கொண்டதற்காக சான்றுறுதி பெறப்படாமல் வழங்குனருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | கொரோனா நிலைமை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் அளவினால் இச்செயற்பாடு மேற் கொள்ளப்பட்டதால் முறைப்படி இச்செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் போனது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 767(1) | 2013 ஆம் ஆண்டின் போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் லுனுகம்வெஹர பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்த 5 வகையான 191 உதவி உபகரணங்கள் களஞ்சியத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தன | அனர்த்த நிலைமையொன்று இதுவரை ஏற்படவில்லை எனவும் இப்பொருட்களை தேவையான வேறொரு நிறுவனமொன்றுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | - மேற்படி - |
| (ஆ) 2013 யூலை 05 ஆந் திகதிய HAF-3-ADMIN-02-002 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் கடிதம் | அம்பலாந்தோட்டை பிரதேச செயலகத்தின் 06 பிரதேச செயலக பிரிவுகளின் கிராம சேவையாளர்கள் மீளாய்வாண்டிற்காக காணி அத்துமீறி கைப்பற்றல், நிர்மாணம் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிக்கப்படவில்லை | நாட்டில் கொரோனா நிலைமை மற்றும் கடமைப் பழு காரணமாக இந்த அறிக்கைகளை உரிய காலத்தில் வழங்க முடியாமல் இருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.6 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 நவம்பர் 02 ஆந் திகதிய PIF/03/2020(VI) மற்றும் 2020 நவம்பர் 30 ஆந் திகதிய PTF/03/2020(VII) ஆம் இலக்கம் மற்றும் 2021 மே 18 ஆந் திகதிய PTF/01/CIR-Proress/01 ஆம் இலக்க பிரதமரின் மேலதிக செயலாளரின் சுற்றறிக்கை ஆலோசணை களுக்கு முரணாக தனிமைப்படுத்தப்படாத 51 குடும்ப அலகுகளுக்காக ரூபா 510,000 ஆன பொருட்கள் பகிர்ந்தளிக்கப் பட்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் இப்பொருட்கள் வழங்குனரிடமிருந்து பிரதேச செயலகத்திற்கு கையேற்கப்பட்டதாகவும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விபரங்களில் உள்ளடக்கப்பட்ட குடும்ப அலகுகளுக்கு அப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதற்கான தகவல்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. | 51 குடும்பங்களுக்காக சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகத்தின் மூலம் அனுப்பிய ஆவணங்களில் விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை என்பதை அறிய தருகின்றேன். | சுற்றறிக்கை ஆலோசணைகளுக்கு இணங்காத வகையில் கூடுதலாக செலுத்திய பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.7 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பளவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வேலை நீக்கம் செய்யப்பட்ட 04 உத்தியோகத்தர்களிடம் இருந்தும் சேவையை கைவிட்டுச் சென்ற 03 உத்தியோகத்தர்களிடம் இருந்தும் மரணித்திருந்த உத்தியோகத்தர் களிடம் இருந்தும் முறையே அறவிடப்பட வேண்டிய ரூபா 719,018, ரூபா 314,515 மற்றும் ரூபா 178,298 தொகை தொடர்பாக தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ரூபா 177,772 ஆன கடன் மீதி தவணையாக அறவிடுவதற்கும் இரண்டு கடன் மீதிகளின் பெறுமதியான ரூபா 357,885 ஐ அறவிடுவதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுத்தமையால் ரூபா 138,371 மீதி | அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் மீதியை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொகையை பிணையாளருக்கு அறிவிக்கப்பட்டு அறவிடுவதற்கும் ரூபா 126,325 ஆன மரணித்தவர்களின் மீதியை பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுப்பேன். | |

**2.8 வைப்பு மீதிகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 13,978,130 ஆன 02 ஆண்டுகளுக்கும் 04 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட 154 வைப்புக்கள் மற்றும் ரூபா 645,649 பெறுமதியான 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 05 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வைப்புக்கள் அனைத்தையும் உரியவருக்கு கொடுப்பனவு செய்வதற்கு இயலுமை காணப்பட்ட போதும் கட்டுநிதி கிடைக்காமையால் கொடுப்பனவு செய்ய முடியாதிருந்ததாக அறிய தருகின்றேன். | குறித்துரைக்கப்பட்ட படி கட்டுநிதியை பெற்று கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த விளைவு மட்டஙகளை அடையாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அச்சுக்கல் பரப்பி வீதி நிர்மாணம் | | |
| I 09 பிரதேச செயலகங்களில் அச்சுக் கல் பரப்பி 163 வீதிகளுக்கு தாரிட்டு (Edge Cutting) உரிய வகையில் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அதற்காக ஒப்பந்தக்காரருக்கு மொத்தம் ரூபா 5,156,984 | மதிப்பீடு தயாரிக்கும் போது விலைப் பகுப்பாய்வு முறையாக தயாரிக்கப்படாமை இந்த குறைவுக்கு காரணமாக | நிறைவேற்றப்பட்ட வேலை குறித்துரைக்கப்பட்ட பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இருந்தது. | |
| II | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வீதியின் பாதம் 100 மில்லிமீற்றர் தடிப்பில் ABC இடப்பட வேண்டிய போதிலும் 90 மில்லிமீற்றர் தடிப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 07 பிரதேச செயலகங்களில் ஒப்பந்தக்காரர்களுக்கு உரிய நியமத்தில் மேற்கொள்ளாத வீதிகளுக்காக திட்டம் தயாரிக்கப்பட்டு ரூபா 4,112,657 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ABC மற்றும் கற்தூள் ஆகிய இரண்டும் தேவையான மொத்த தடிப்பு மட்டத்தில் காணப்படுவதுடன் அது வீதியின் நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்கு சிக்கலொன்றல்ல என அறிய தருகின்றேன். | மதிப்பீட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| III | இந்த செயற்திட்டத்தின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட 03 பிரதேச செயலகங்களில் 05 வீதிகள் ஒரு இலட்சம் செயற்திட்டத்தின் காபட் இடுவதற்கு தேவையான அங்கீகாரத்தை வழங்கியதால் ரூபா 3,464,998 ஆன செலவினம் விளைவற்று இருந்தது. | 2016 ஆம் ஆண்டில் அபிவிருத்தி செய்யப்பட்ட வீதிகளுக்கு இடையே கணக்காய்வினால் பரீட்சிக்கப்பட்ட 31 வீதிகளில் 03 வீதிகள் மோட்டார் வாகனங்களின் பயணத்திற்கு பொருத்தமான நிலைமையில் இருக்கையில் வேறொரு அரச நிறுவனமொன்றின் மூலம் காபட் இடப் பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். | காபட் இட்டு பொருத்தமான நிலையில் இருந்த வீதி மீண்டும் அபிவிருத்தி செய்வதற்கு பரிந்துரைத்த பொறுப்பானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அங்குணுகொலபெலஸ்ஸ நகரில் நீர் கழிவுக் காண் முறைமை நிர்மாண வேலையின் விலை கோரலின் போது கேள்விதாரர்களுக்கு விலை விபரங்களை முன்வைப்பதற்கு 03 வார காலம் வழங்கப்பட வேண்டிய போதிலும் 04 வேலை நாட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன, மெலும் கேள்வி ஆவணங்களின் பிரகாரம் பொருத்தமான ஒப்பந்தக்காரரின் குறைந்த தகைமை நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையீன் சீ 7 வரையின் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அத்தகைமைகள் பூர்த்தி செய்யாத 02 நிறுவனங்களிடமிருந்து கூறு விலை கோரப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகள் விரைவாக மேற்கொள்ள வேண்டிய போதிலும் விலை கோரல் கடிதங்களுக்கு மேலதிகமாக தொலைபேசி மூலம் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படட்டுள்ளதாகவும் நிர்மாண வேலையின் அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு தொடர்பாக தகவல்கள் குறிப்பிடப்படாத நிறுவனங்களிலிருந்தும் கேள்வி கோரப்ட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் விலை கோரலுக்காக போதியளவு காலம் வழங்குதல் மற்றும் பொருத்தமான ஒப்பந்தக்காரர்களிட மிருந்நுது விலை கோரப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கீழ் காணப்பட்ட சுனாமி ரீகன்ஸ்ரக்ஷன் பிரிவின் மூலம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கில்கள் 2017 யூன் மாதம் 27 ஆந் திகதி மீண்டும் அதிகாரசபைக்கு கையளிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் கையளிக்கப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை குறித்த இரண்டு மோட்டார் சைக்கில்களை பயன்படுத்தாமல் பிரதேச செயலகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | இரண்டு மோட்டார் சைக்கில்களையும் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் | குறித்த சொத்துக்களை உரிய நிறுவனத்திற்கு தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 இழப்புக்கள் மற்றும் நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குரியதாக ஏற்பட்டிருந்த 22 சம்பவங்களுக்குரிய ரூபா 1,266,193 தொகையான இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்த ரூபா 80,664 ஆன 05 நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பாக நட்டங்கள் மற்றும் விட்டுவிடல் தொடர்பான கூற்று குறிப்பு – (1) இன் கீழ் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை | 02 சம்பவங்களுக்காக பதிவழிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் பதிவேடு களிலிருந்து நீக்கப்படவில்லை யெனவும் மேலும் 02 சம்பவங்களுக்குரிய கோவைகளை கண்டுபிடிக்க முடியாமையால் அதற்காக எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பாந்தோட்டை பிரதேச செயலக அதிகாரப் பிரதேத்தில் பெல்ஜியம் வீடு இரண்டாவது ஒழுங்கை எஞ்சிய பகுதியன் வடிகாண் முழைறமை அமைக்கும் நிர்மாண வேலையின் உடனடபடிக்கை பத்திரத்தின் விலை | 21/2084/306/094 ஆம் இலக்க 2021.12.06 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் | அமைச்சரவை தீர்மானத்திற்கு 47 நாட்கள் முன்னர் நிர்மாண வேலை பூர்த்தி செய்யப் பட்டிருந்ததாலும் |

| | | |
|---|---|---|
| விலகலை கொடுப்பனவு செய்வதற்குரிய நிபந்தனைகள் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அதற்காக முறையாக அதிகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் விலை விலகல் ரூபா 568,413 ஆன மேலதிக தொகை ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பிரகாரம் முன்மொழிவின் 3.2 முன்மொழிவின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | உடன்படிக்கை காலம் 03 மாதங்களுக்கு குறைவாக இருப்பதால் கூடுதலாக கொடுப்பனவு செய்த பணத்தை அறவிட வேண்டும்.குறித்துரைத்த காலப்பகுதியில் கணக்காய்வு ஐயவினாக்களுக்காக பதில் அளிக்கப்பட வேண்டும். |

### 3.6 முகாமைத்துவ நலிவுகள்

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தங்காலை பிரதேச செயலகத்தின் சமூர்தி, வீட்டுப் பொருளாதாரம், நுண் நிதி, சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் சௌபாக்கிய உற்பத்தி கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் 2021/1 வழிகாட்டல் கோவையின் 7(II) பந்திக்கு இணங்காத வகையில் மாசி போரணை அமைக்கும் போது தொழில்நுட்ப நியதிகள் பின்பற்றாதிருந்த 50 நலனாலிகளுக்கு ரூபா 100,000 வீதம் மொத்தம் ரூபா 5,000,000 பெறுமதியான பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. | திட்டத்தின் பிரகாரம் போரணை அமைப்பதற்கு நலனாலிகள் எதிர்ப்பு தெரிவித்திருந்ததுடன் பொருட்களை வழங்குமாறு கோரப்பட்டதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | 2021/1 வழிகாட்டல் கோவையின் 7(II) பந்திக்கு இணங்கும் வகையில் செயற்பட வேண்டும் |
| (ஆ) வெளித்தரப்பினர்களால் லுணுகம்வெஹர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள அரசின் காணிகளை அத்துமீறிய வகையில் பிடித்திருந்த 06 சந்தர்ப்பங்கள் தொடர்பாக நீதிமன்றத்தினால் வெளியேற்றும் கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்த போதும் குறித்த காணி மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அரசிற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | அத்துமீறிப் பிடித்தல் தொடர்பாக 2022 சனவரி மாதம் விநியோகிக்கப் பட்டிருந்த கடிதங்கள் மூலம் கிராமசேவையாளருக்கு அறிவித்து நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது | நீதிமன்றக் கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் நீதிமன்றத்தினால் வெளியேற்றும் கட்டளை வழங்குவதை நிராகரித்து மீண்டும் வழக்கு தொடரப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த 03 சந்தர்ப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | அம்பலந்தொட்ட பிரதேச செயலகத்தினால் மினிஅதிலிய கிராம சேவையாளர் பிரிவில் அத்துமீறிய 05 குடியிருப்பாளர்களுக்கு வழங்கப் பட்டிருந்த வெளி யேற்றும் அறிவித்தல ("அ" படிவம்) இன் பிரகாரம் அந்த அத்துமீறிய குடியிருப்பாளர்கள் அகற்றப்படாதிருந்ததுடன் காணி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வெளியேற்றும் கட்டளை கோரல் ("ஆ"படிவம்) மீளாய்வாண்டின் இறுதி வரை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொரோனா நிலைமை காரணமாக அரசின் பல நிறுவனங்களுக்கு பல கடமைகள் முறையாக மேற்கொள்ள முடியாமல் இருந்துள்ளது | குறித்த சட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சூரியவெவ மிரிஜ்ஜவெல வீதி செயற்திட்டத்திற்காக 2013 ஆகஸ்ட் 27 ஆந் திகதி அரசிற்கு கையேற்கப்பட்டிருந்த துண்டு இலக்கம் டீ – 7377-ஏ பகுதிக்காக ரூபா 1,887,000 ஆன சட்டரீதியான பெறுமதி கொடுப்பனவு தாமதம் காரணமாக மீளாய்வாண்டின் இறுதி வரை வட்டியாக ரூபா 1,102,197 கொடுப்பனவு செய்வதற்கு இருந்தது. | பல நிறுவனங்களின் செயற்பாடுகள் சிக்கலான நிலைமையில் இருந்ததால் இவ்வாறான தாமதம் இடம்பெற்றுள்ளதாக அறிய தருகின்றேன். | குறித்த கூட்டிணைப்புடன் கூடிய தாமதமின்றி கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தினால் 2010 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை 337 வருடாந்த குத்தகையிலிருந்து ரூபா 719,154 ஆன நிலுவை வருடாந்த குத்தகை மற்றும் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருடாந்த குத்தகை மற்றும் தணட பணத்தில் ரூபா 85,622 தொகை 2022.01.20 ஆந் திகதி வரை அறவிடப்பட்டுள்ளதாகவும் ஏனையவர் உடமை கொண்டுள்ள வருடாந்த அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன | நிலுவை வருடாந்த குத்தகை மற்றும் தண்ட பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

(ஊ) புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தினால் விநியோகிக்கப்பட்ட IML/A/HO/N/4314/LR/9 ஆம் இலக்க அகழ்வு அனுமதிப்பத்திரம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | அரசின் காணி செயற்பாட்டுக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 08 ஆம் பிரிவு, 1979 இன் 07 ஆம் இலக்க (உரித்தினை மீளப்பெறல்) சட்டத்தின் 180 ஆம் காணி கட்டளை பிரிவிற்கும் 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் SP/RD/02/10 ஆம் இலக்க அரச காணி முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கையின் 2.2 ஆம் பிரிவிற்கு இணங்காமல் அகழ்வு அனுமதிப்பத்திர மொன்றை வழங்குவதற்கு தேவையான பரிந்துரையை வழங்குவதற்கு சூரியவெவ மற்றும் அம்பலந்தொட்டை பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுத்திருந்தன | காணி ஆணையாளரின் ஆலோசணையின் பேரில் அரச நில அளவை யாளரால் இக்காணி அரச காணியொன்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது அதன் பிரகாரம் அம்பலந்தொட்டை பிரதேச செயலாளரினால் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன் காணி ஆணையாளர் நாயகத்தின் 2021.03.22 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அதற்கு வருடாந்த அனுமதிப்பத்திரத்தை வழங்குமாறு ஆலோசணை வழங்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப ஆண்டிலிருந்து குத்தகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்து இருந்ததாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | அரசின் காணி கட்டளைச் சட்டத்தின் 196.1(vi) பிரிவின் பிரகாரம் மற்றும் சிரேஷ்ட மதிப்பீட்டாளரின் HT/ML/3485 ஆம் இலக்கம் மற்றும் 2022 சனவரி 19 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 120 மாதங்களுக்காக மொத்தம் ரூபா 3,280,000 ஆன வருடாந்த குத்தகை வருமடானம் அறவிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் காணியின் வருடாந்த அபிவிருத்தி செய்யப்படாத பெறுமதியை 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ஆண்டுதோறும் பெற்றுக கொள்ள நடவடிக்கை | காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் பிரதான பேரில் அரச நில அளவையாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் குத்தகை பணம் அறவிடப்பட்டுள்ளதாக | காணி கட்டளைச் சட்டத்தினதும் சிரேஷ்ட மதிப்பீட்டாளரின் 2022 சனவரி 19 ஆந் திகதிய HT/ML/3485 ஆம் இலக்க் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | எடுத்திருந்தால் இழக்கப்படும் வருடாந்த குத்தகை வருமானம் மேலும் அதிகரிக்கும் என அவதானிக்கப்பட்டது. | | |
| (iii) | கணிய அனுமதிப்பத்திர தாரரின் அறிக்கையின் பிரகாரம் அகழப்பட்ட மொத்த கருங்கல் அளவு 173,586.2 கியுப்களாக இருந்ததுடன் வனச் சட்டத்தின் பிரகாரம் அனுமதிப்பத்திர தாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 173,586,200 ஆன அரசின் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும் அனுமதிப்பத்திரதாரரால் அகழப்பட்ட மொத்த கருங்கல் கியுப் அளவு எவ்வளவு என்பது தொடர்பாக இனங் காண்பதற்கு விசேட அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க மேலும் அறவிடப்பட வேண்டிய அரசின் கட்டணங்கள் அளவு இனங் காணப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | இக்காணி அரசின் காணி என இனங்காணப்பட்டதன் பின்னர் குறித்த மதிப்பீட்டின் பிரகாரம் சரியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன்காணி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டில் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொண்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இதுவரை குத்தகை பணம் அறவிடப்பட்டுள்ளதாக | வனச் சட்டத்தின் கீழ் விநியோகிக்கப்பட்ட 2009 மே 06 ஆந் திகதிய 1600/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் 10(1) ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iv) | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின் மூலம் விநியோகிக்கப் பட்டிருந்த அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்காமல் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் வெடிபொருட்கள் அனுமதிப்பத்திரங்களின் கீழ் 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 27,100 மின் டெடினேடர் முறையற்ற வகையில் வழங்கப்பட்டிருந்தன. | அவதானிப்பிற்குரியதாக பதிலொன்று வழங்கப் பட்டிருக்கவில்லை. | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின் மூலம் விநியோகிக் கப்பட்டிருந்த அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. நல்லாளுகை**

-----------------

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சூரியவெவ பிரதேச செயலகத்தினால் தனிமைப் படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு ரூபா 17,950,000 ஆன பொருட்களை பகிர்ந்தளிக்கும் போது பொருட்கள் தகைமையுடைய நலனாலிகளுக்கு வழங்கு வதற்குரிய விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் குறித்த பொருட்களை உரிய நலனாலிகளுக்கும் கையளிக்கப்பட்டதற்காகவும் பொறுப்பேற்கப்பட்டதாக உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | தொலைபேசி மூலம் குறித்த நலனாலிகளுக்கு பொருட் பொதிகள் கிடைத்ததாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக . | கொள்வனவு செய்த பொருட்களை பொறுப்பேதற்கும் பகிர்ந்தளிப்பதற்கும் உரிய முறையான அறிக்கைகள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) 2021 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய PIF/03-2021(III) ஆம் இலக்க பிரதமரின் மேலதிக செயலாளரின் சுற்றறிக்கை ஆலோசணைகளுக்கு இனங்காத வகையில் சூரியவெவ பிரதேச செயலகத்தினால் குறைந்த வருமானம் நலனாலிகளாக உறுதிப்படுத்தப்படாத குடும்பங்களுக்காக குறைந்த வருமானம் பெறுவோருக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய ரூபா 3,200,000 ஆன 320 பொருட் பொதிகள் பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தன | நலனாலிகள் தொடர்பான தகவல்கள் கிராம சேவையாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டு ஈரக்கவில்லையென வும் பின்னர் அது சரிசெய்யப்பட்டது. | 2021 ஆகஸ்ட் 24 ஆந் திகதிய PIF/03-2021(III) ஆம் இலக்க பிரதமரின் மேலதிக செயலாளரின் சுற்றறிக்கை ஆலோசணைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

---

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதவியணியினர்களில் 158 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் 107 மேலதிக பதவியணியினரை முறையாக அங்கீகாரித்துக் கொள்ளாமல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | வெற்றிடங்கள் அமைச்சுக்கு அறிக்கை இடப்பட்டுள்ளதுடன், மிகை ஏற்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை மிகைத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு இணைக்கப்பட்டமையே காரணமாகும். | வெற்றிடமான பதவியணியினர் களை ஆட்சேர்ப்பதற்கும் மிகையான பதவியணியினர் களுக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |